**Judicial Form No. 53**

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KRISHNAGIRI

Calendar .. ..
Miscellaneous .. ..
Preliminary Register .. .. STC.No. 319/2024
Deposition of witness for PW 1

Name : மகாலிங்கம்
Fathers Name / Husband :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 26th of April - 2024.

(எதிரி ஆஜர்)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் டிப்ளமோ பார்மசி படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் மருந்து கடை வைத்துள்ளேன், ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்கிறேன். தற்போது மருந்து கடை நடத்துகிறேனா என்றால் இல்லை. ரியல் எஸ்டேட் மற்றும் விவசாய்ம செய்து வருவதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தாக்கல் செய்கிறேன். நான் வருமான வரி தாக்கல் செய்கிறேன். நான் தவறாமல் வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் செய்யும் தொழிலுக்கு கணக்கு வழக்கு பராமரிக்கிறேனா என்றால் பராமரிக்கிறேன். எதிரிக்கு கடன் கொடுத்ததை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். மேற்படி ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்யும் போது ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞர் கேட்கவில்லை. நான் எதிரிக்கு 20 இலட்சத்தையும் ரொக்கமாக கொடுத்தேன். 20 இலட்சத்தை ரொக்கமாக கொடுப்பது சட்டபடி குற்றம் என எனக்கு தெரியுமா என்றால் தெரியும்,

பழக்க வழக்கத்தால் கொடுத்தேன். நான் செய்யும் தொழிலுக்கு முதலிடாக சுமார் 50 இலட்சம் போட்டிருப்பேன். அந்த முதலீட்டிற்கான எந்த ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தாக்கல் செய்கிறேன். 20 இலட்சம் ரூபாய் பணம் என்னிடம் இருந்தது என்பதற்கு ஆதாரம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தாக்கல் செய்கிறேன். எதிரி பணம் கேட்டதற்கு ஆவணம் ஏதாவது எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. எதிரிக்கு பணம் கொடுத்தற்கு ரசிது ஏதாவது வாங்கினேனா என்றால் இல்லை, காசோலை மட்டும் வாங்கினேன். வழக்கு காசோலையை வில்வம் கொடுத்தாரா, அற்புதம் கொடுத்தாரா அல்லது எதிரி கொடுத்தாரா என்றால் எதிரி சம்பத் தான் கொடுத்தார். சம்பத் ஏஜென்சியில் யார் யார் பங்குதாரர்கள் என்றால் சம்பத், சம்பத்தின் தம்பி வில்வத்தின் மகள்கள் இருவர் மற்றவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது 17.10.2022 என்றால் சரிதான். 02.09.2022 என பின்தேதியிட்டு காசோலை எண் 590951 பாரத் ஸ்டேட் வங்கி பாப்பிரெட்டிபட்டி கிளை காசோலையை எதிரி கொடுத்தார் என புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 15.09.2022 அன்று தேதியிட்ட ரிட்டன் மெமோவில் Payment stopped by the drawer என காசோலை திருப்பபட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியால் எந்த தேதியில் Stop Payment கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 21.09.2021 அன்றே எதிரி Stop payment கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகாரில் பத்தி 7ல் எதிர்மனுதாரர் 27.09.2022 அன்று சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டார் என்றும் தாக்கல் செய்த ஆவணத்தில் எதிர்மனுதரார் சட்ட அறிவிப்பை வாங்க மறுத்துவிட்டார் என்றும் குறிப்பிட்டுள்ள நிலையில் எது சரியென்றால் எதிரி வாங்க மறுத்ததுதான் சரியானது. என்னிடம் காட்டப்படுவதுதான் நான் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி 24.09.2022 தேதியிட்ட எதிரிக்கு புகார்தாரரின் வழக்கறிஞர் அனுப்பிய சட்டஅறிவிப்பு (தபால் கவருடன்) எ.சா.ஆ-1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. எனக்கு இந்த வழக்கின் உண்மை தன்னை தெரியாது என்றாலும் அதனால் தான் மாற்றி மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது 14.10.2022 தேதியிட்ட ஏிதிரி எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு என்றாலும் அந்த பதில் அறிவிப்பை எனது வழக்கறிஞர் 17.10.2022 அன்று ஒப்புகை சீட்டில் கையெழுத்து போட்டு பெற்றுள்ளார் என்றாலும் நான் வழக்கு தாக்கல் செய்தபிறகு பதில் அறிவிப்பு கிடைத்ததால் அதை வழக்கில் போடவில்லை என்றால் பதில் அறிவிப்பு வந்ததாக எனது வழக்கறிஞர் சொல்லவில்லை. மேற்படி 14.10.2022 தேதியிட்ட பதில் அறிவிப்பு (ஒப்புகை அட்டை மற்றும் பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள ஆவண நகல்களுடன்) எ.சா.ஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. சம்பத் ஏனென்சிஸ் அவர்களது முன்னால் மேலாளர் அற்புதம் என்பவர் மீது கூட்டுசதி, பணம் கையாடல் உள்ளிட்ட பல்வேறு குற்ற செயல் புரிந்ததாக தர்மபுரி மாவட்ட குற்ற பிரிவில் வழக்கு விசாரணையில் உள்ளது என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல்

செய்த அதே ஆண்டு எனது நண்பர் சரவணன் அற்புதம்மாளிடம் இருந்து சம்பத் ஏஜென்சியின் காசோலையை வாங்கி காசோலை வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆனது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, சரவணன் யார் என்று எனக்கு தெரியாது. சரவணன் மற்றும் சரவணனின் அக்கா கணவர் செந்தில் ஆகியோரை எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரவணன் அந்த வழக்கை நடத்தும் போது நானும் செந்திலும் உடந்தையாக நீதிமன்றத்திற்கு வந்து போனோம் என்றால் சரியல்ல. சரவணன் எனது பாட்னரின் மச்சான் என்றால் சரிதான். நான் எந்த தேதியிலும் எந்த பணத்தையும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை சம்பத் மூலம் எனது கைக்கு வரவில்லை என்றாலும் அற்புதம்மாள் மூலம் சரவணனுக்கு வந்து என்னிடம் வந்தது என்றால் சரியல்ல. அற்புதம்மாளிடம் இருந்து வழக்கு காசோலையை சரவணன் வாங்கி சரவணனிடம் இருந்து காசோலையை நான் பெற்று தவறுதலாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. ரூபாய் 20 இலட்சத்தை ரொக்கமாக எதிரிக்கு கொடுப்பதற்கு தகுதியும் அறுகதையும் எனக்கு இல்லை என்றால் 5 வது மாதத்தில் தான் பிளாட்டை விற்றேன், எனக்கு வருமானம் உள்ளது. பிளாட்டை விற்பனை செய்ததற்கான ஆவணத்தை வழக்குடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தாக்கல் செய்கிறேன். அந்த பிளாட்டை விற்று பெற்ற பணத்தை சம்பத்திற்குதான் கொடுத்தேன் என்பதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பொய் புகார் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH
JUDICIAL MAGISTRATE NO.I
Digitally signed by K KARTHICK ASATH
Location: KRISHNAGIRI

குற்றவியல் நடுவ்ர எண் 1,

கிருஷ்ணகிரி.